DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 20/2023 |
| Deposition of witness | : | PW-1 |
| Name | : | அன்சாரி |
| Father's /Husband Name | : | இஸ்மாயில் |
| Village | : | கொல்லுமாங்குடி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 54 |
| Occupation | : | டிரைவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 03rd day October 2023.
Accused present.

**முதல் விசாரணை தொடர்ச்சி:-**

கடந்த 07.07.2022 ம் தேதி காரைக்காலிலிருந்து பேரளம் நோக்கி வந்த கண்ணபிரான் பேருந்தில் ஏறி பயணித்து கொண்டிருந்தபோது சுமார் இரவு 08.00 மணியளவில் குருமூர்த்தி என்பவரது மகனான ஆஜர் எதிரி செந்தில்குமார் என்னை பார்த்தவுடன் எனது தந்தையிடம் வாங்கிய பணத்தை கொடுக்க முடியாதா என்று கூறி முட்டாபுண்ட என்று அசிங்கமான வார்த்தைகளால் அனைவரும் முன்னிலையிலும் அசிங்கமாக திட்டி பேருந்தை நிறுத்தி என்னை பேருந்திலிருந்து அவரது தந்தைக்கு தர வேண்டிய பணத்தை தர சொல்லி பிரச்சனை செய்து என்னை கீழே இழுத்தார். அதில் நான் கீழே விழுந்தேன். அதில் எனக்கு இடது காலில் காயம் ஏற்பட்டது. நான் காலை தூக்க முயற்சி செய்தபோது அதை என்னால் தூக்க முடியவில்லை. கால் உடைந்து விட்டது. பிறகு நான் காலை கையால் தூக்கியபோது கால் நிற்காமல் கீழே விழுந்தது. பிறகு 108 ஆம்புலன்ஸ் மூலம் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் அனுமதித்தார்கள். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவமனையில் சேர்ந்தேன். ஒரு மாதம் வரை தொடர்ந்து திருவாரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுதததுக்கொண்டேன். அதை தொடர்ந்து தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டேன். தற்பொழுதும் எலும்பு முறிந்த இடத்தில் வலி உள்ளது. கைத்தடி வைத்துதான் நடந்து வருகிறேன். என்னிடத்தில் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த**

**புகார்வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் எதிரியும், அவரது வழக்கறிஞரும் ஆஜரில் இருந்து குறுக்கு விசாரணை இல்லை என்று கூறியதால் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படாமல் சாட்சி விசாரணை முடிக்கப்பட்டு சாட்சி திருப்பி அனுப்பப்பட்டார்.

**மறுவிசாரணை**

இல்லை

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நன்னிலம்.